ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி
(மா.அ.தி–1)த் துறை,
தலைமைச் செயலகம், சென்னை–9.

இணையதளம்.www.tnrd.gov.in
தொலைபேசி. 25670769
நிகரி எண் . 25675849

**<u>கடிதம் (1D) எண். 653, நாள் : 31.12.2012.</u>**

அனுப்புநர்
திரு. ச.வி. சங்கர், இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்.

<u>பெறுநர்</u>
அனைத்து சட்டமன்ற உறுப்பினர்கள்
(ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் வாயிலாக).
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை–15.
அரசு முதன்மைச் செயலாளர், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை–9.
செயலாளர், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை–9.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் (சென்னை நீங்கலாக)
அனைத்து மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர்கள்
(ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் வாயிலாக).
ஆணையர், சென்னை மாநகராட்சி, சென்னை–3.
பேரூராட்சிகள் இயக்குநரகம், சென்னை–108.
ஆணையர், கருவூலக் கணக்கு, சென்னை–15.
உறுப்பினர்/செயலர், மாநிலத் திட்டக் குழு, சென்னை–5.
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை, சென்னை–108.
மாநில தலைமை கணக்காயர், சென்னை – 6/18/35.
சம்பளக் கணக்கு அலுவலர் (தலைமை செயலகம்), சென்னை–9.
சம்பளக் கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை–35.
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை–5.
சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை–1.
சம்பளக் கணக்கு அலுவலர், மதுரை.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.

அய்யா/அம்மையீர்,

பொருள் திட்டங்கள் – மாநிலத் திட்டம் – சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் – திட்டத்தினை செயல்படுத்துவதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டது – மாற்றுத் திறனாளிகளுக்கு கருவிகள் மற்றும் உபகரணங்கள் வாங்குவதற்கு ஒதுக்கப்பட்ட ரூ.5.00 இலட்சத்தில் மேலும் சில உபகரணங்கள் வாங்க அனுமதி அளித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

பார்வை 1. அரசாணை (1டி) எண்.405, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அ.தி1) துறை, நாள் 17.08.2011.

(த.பி.பா)

2. அரசாணை (நிலை) எண்.80, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அ.தி1) துறை, நாள் 28.10.2011.
3. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கடிதம் ந.க. எண்.10020/இவாததி–1/2011, நாள் 24.11.2011.
4. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் அவர்களின் கடிதம் எண்.63654/2011/என்.இ.டி.எம்.2, நாள் 5.07.2012.
5. அரசாணை (நிலை) எண்.74, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அ.தி1) துறை, நாள் 16.08.2012.

*****

பார்வை இரண்டில் உள்ள அரசாணையில் 2011–2012–ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தினை செயல்படுத்துவதற்கான ஆணைகளும் விரிவான வழிகாட்டு நெறிமுறைகளும் வெளியிடப்பட்டன. மேற்படி திட்டத்தில் ஒவ்வொரு சட்டமன்ற தொகுதிக்கும் தலா ரூ.2.00 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்பட்டு, அதில் சம்மந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினர் ரூ.5.00 இலட்சம் மாற்றுத் திறனாளிகளுக்கு உபகரணங்கள் வாங்குவதற்கு ஒதுக்கீடு செய்யலாம் என ஆணையிடப்பட்டுள்ளது. மேலும், மாற்றுத் திறனாளிகளுக்கு தேவைப்படும் உபகரணங்களான மூன்று சக்கர சைக்கிள், சக்கர நாற்காலி, காலிபர், கிரட்சஸ், செயற்கை அவயம், கருப்புக் கண்ணாடி, மடக்குக் குச்சி, செவி துணை கருவி, சூரிய ஒளியினால் மின்சக்தி பெறும் பேட்டரி ஆகியவைகளை, பார்வை 1–ல் உள்ள அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டி நெறிமுறைகளின்படி கொள்முதல் செய்ய வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

2. பார்வை 3–ல் உள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரது கடிதத்தில், மேற்படி உதவி உபகரணங்கள் 2010–2011–ஆம் ஆண்டில் கொள்முதல் செய்து வழங்கப்பட்டது என்றும், அத்தகைய உபகரணங்கள், தமது துறையின் மூலம் ஒவ்வொரு ஆண்டும் செயல்படுத்தப்பட்டு வரும் உதவி உபகரணங்கள் வழங்கும் தொடர் திட்டத்தின்கீழும், மத்திய அரசின் தொண்டு நிறுவனங்கள் மூலம் உதவி உபகரணங்கள் வழங்கும் திட்டத்தின்கீழும், பெரும்பாலோனருக்கு வழங்கப்பட்டு வருவதால், இவ்வகை உதவி உபகரணங்கள் கோரும் மாற்றுத் திறனாளிகளின் எண்ணிக்கை குறைந்து வருகிறது எனவும், இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட ஸ்கூட்டர்கள், நவீன செயற்கை அவயங்கள் மற்றும் காதுக்குப் பின்புறம் அணியும் காதொலி கருவிகள் கோரி காத்திருப்போர் பட்டியலில் உள்ள மாற்றுத் திறனாளிகள் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும், இந்த உபகரணங்களை தனது துறை மூலம் தொடர் திட்டங்களின்கீழ் ஒவ்வொரு ஆண்டும் அரசின் நிதி ஒதுக்கீட்டின்படியே வழங்கப்படுவதாலும் இவற்றை கூடுதலாக வழங்க வேண்டிய அவசியம் எழுந்துள்ளது எனவும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஒதுக்கப்பட்ட ரூ.5.00 இலட்சத்தில், ஒவ்வொரு தொகுதிக்கும் ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டில் கீழ்கண்டவாறு இரண்டு இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட ஸ்கூட்டர், இரண்டு நவீன செயற்கை அவயங்கள் மற்றும் இரண்டு காதுக்குப் பின்புறம் அணியும் காதொலிக் கருவிகள் ஆகியவற்றைப் பெற்று வழங்கலாம் எனவும், எஞ்சிய ரூ.3.00 இலட்சத்தில் இதர உபகரணங்கள், பார்வை 1–ல் உள்ள அரசாணையில் வெளியிடப்பட்ட கூடுதல் வழிகாட்டு நெறிமுறைகளின்படி பெற்று வழங்கலாம் எனவும் கேட்டுக் கொண்டுள்ளார்.

(தொடரும்)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1. | இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட ஸ்கூட்டர்கள் | – | ரூ.50,000/– | X | 2 | ரூ. 1.00 இலட்சம் |
| 2. | நவீன செயற்கை அவயம் | – | ரூ.40,000/– | X | 2 | ரூ.0.80 இலட்சம் |
| 3. | காதுக்குப் பின்புறம் அணியும் காதொலிக் கருவி | – | ரூ.10,000/– | X | 2 | ரூ.0.20 இலட்சம் |
| | | | **மொத்தம்** | | | **ரூ.2.00 இலட்சம்** |

**3.** மேற்குறிப்பிட்ட மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் பரிந்துரை மீது ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் குறிப்பு கேட்கப்பட்டதில் அவர், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியிலிருந்து மாற்றுத் திறனாளிகளுக்கென **2011–2012–**ம் ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி இதுவரை செலவிடப்படவில்லை என்றும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் **2011–2012–**ஆம் ஆண்டில் பிறப்பிக்கப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படி மாற்றுத் திறனாளிகளுக்கு, மூன்று சக்கர சைக்கிள், சக்கர நாற்காலி, காலிபர், கிரட்சஸ், செயற்கை அவயம், கருப்புக் கண்ணாடி, மடக்குக் குச்சி, செவித் துணை கருவி, சூரிய ஒளியினால் மின்சக்தி பெறும் பேட்டரி ஆகிய உதவி உபகரணங்கள் வழங்குவதுடன் மேலும் **3** உபகரணங்களான இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட ஸ்கூட்டர், நவீன செயற்கை அவயம் மற்றும் காதுக்கு பின்புறம் அணியும் காதொலிக் கருவி ஆகியவற்றை வாங்கி வழங்க அனுமதிக்கலாம் எனவும் பரிந்துரை செய்துள்ளார்.

**4.** மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் செயற்குறிப்பு மற்றும் அதன் மீதான ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் பரிந்துரையை அரசு கவனமாக பரிசீலனை செய்து, **2012–2013–**ம் ஆண்டிற்கான சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின்கீழ் வரையறுக்கப்பட்ட நிதியில் மாற்றுத் திறனாளிகளுக்கென ஒதுக்கப்பட்ட தொகையான ரூ.**5,00,000/–**லிருந்து, ஏற்கனவே மாற்றுத் திறனாளிகளுக்கு வாங்கி வழங்க அனுமதிக்கப்பட்ட உதவி உபகரணங்களுடன் இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட ஸ்கூட்டர், நவீன செயற்கை அவயம் மற்றும் காதுக்குப் பின்புறம் அணியும் காதொலி கருவி ஆகிய **3** உபகரணங்களை வாங்கி வழங்கவும், **2011–12–**ம் நிதியாண்டிற்கான நிதியைச் செலவிட ஏதுவாக மேற்கூறிய மூன்று உபகரணங்களை **2011–12–**ம் ஆண்டிற்கான நிதியில் வாங்கி வழங்கிட இதனை ஒரு சிறப்பு நேர்வாகக் கருதி அனுமதி அளித்தும் அரசு ஆணையிடுகிறது.

**5)** இக்கடிதம் நிதித் துறையின் அ.சா. எண்.**2598**/FS/P/2012, நாள் **23.08.2012–**ல் பெற்ற ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள,

அரசு முதன்மைச் செயலாளருக்காக

<u>நகல்</u>

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கூடுதல் தலைமைச் செயலாளர்/செயலாளர் – I, சென்னை–**9.**

மாண்புமிகு நிதி அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–**9.**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–**9.**

தலைமைச் செயலாளரின் நேர்முக உதவியாளர், சென்னை–**9.**

நிதி (வரவு–செலவு– I / வரவு–செலவு– II / ஊ.வ) துறை, சென்னை– **9.**